சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி. எண். 13/2022

| | | |
|---|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | பாரதி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மனுவில் 1ம் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, இறப்பு அறிக்கை ம.சா.ஆ.2, பார்த்தசாரதி சம்பள சான்று ம.சா.ஆ.3, பார்த்தசாரதி மாற்றுச்சான்றிதழ் ம.சா.ஆ.4, வாகன பதிவுச்சான்று ம.சா.ஆ.5, வாகன காப்பீட்டு சான்று ம.சா.ஆ.6, நெப்போலியன் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.7, வாகன அனுமதி சான்று ம.சா.ஆ.8, பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.9, மருத்துவர் வழங்கியுள்ள கருத்துரை ம.சா.ஆ.10, பாரதி ஆதார் அட்டை ம.சா.ஆ.11, சாந்தி ஆதார் அட்டை ம.சா.ஆ.12, பார்த்தசாரதி வாரிசு சான்று ம.சா.ஆ.13,

மிதிலேஷ் பிறப்பு சான்று ம.சா.ஆ.14, பிரகதி பிறப்பு சான்று ம.சா.ஆ.15, பார்த்தசாரதி ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.16. (ம.சா.ஆ.11, 12 அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) (ம.சா.ஆ.3, 6 ஆவணங்கள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

குறுக்கு விசாரணை

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.